**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 469/25 | Date | : 04.03.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : ராசு | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.03.2026

(எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் ஈரோடு ஈஸ்வரன் வீதியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அவர் எதிரிகளை எனக்கு தெரியாது இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் அடிக்கடி சூரம்பட்டி வலசு வணிகவளாக மாடியில் சென்று எதிரிகள் முகமது கவுஸ் மற்றும் ராம்கியிடம் லாட்டரி சீட்டு வாங்குவேன் என்று சொன்னால் இல்லை. அவர்கள் என்னிடம் வெள்ளை பேப்பரில் லாட்டரி சீட்டு எண்களை எப்பொழுதும் எழுதிக் கொடுப்பார்கள் என்றால் இல்லை. அந்த நம்பருக்கு நிச்சயம் பரிசுவிழும் என்று சொல்லி என்னை நம்ப வைத்து 100, 200 பணம் கொடுத்து லாட்டரி

சீட்டு எண்களை வாங்க சொல்லுவார்கள் என்றால் இல்லை. அவ்வாறு நான் பலமுறை வாங்கி சென்று ஏமாந்து உள்ளேன் என்றால் இல்லை. கடந்த 23.12.2024 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு கள்ளுக்கடை மேடு, பத்திரகாளி அம்மன் கோவில் அருகில் ஆஜர் எதிரிகள் இருவரும் லாட்டரி சீட்டின் நம்பர்களை எழுதிக் கொண்டிருக்கும் போது அவர்களை போலீசார் பிடித்தார்கள் என்றால் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.04 17:13:38 -0800

Judicial Magistrate No.III,

Erode.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 469/25 | Date | : | 04.03.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.2 | Taluk | : | |
| Name | : | சந்தோஷ் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.03.2026

(எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் ஈரோடு அன்னை நகர் பழைய பாளையத்தில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 2024 ஆம் வருடம் டிசம்பர் மாதம், தேதி ஞாபகம் இல்லை. ஒரு நாள் மதியம் 12.00 மணியளவில் நானும் அரசு என்பவரும் சூரம்பட்டி வலசு வணிக வளாகம் அருகில் இருந்தபோது ஈரோடு தெற்கு போலீசார் அங்கு வந்து லாட்டரி சீட்டு விற்பனை செய்தது சம்பந்தமான வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்து எங்களிடம் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது கையொப்பம் அரசு என்பவரது கையொப்பமாகும். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ 1ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :**

நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு போலீசார் கேட்டுக் கொண்டதற்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.04 17:13:46 -0800

Judicial Magistrate No.III,

Erode.